# 2.11 இந்த அழைப்பு

**வேத வசனம்:** இயேசு அவர்களை நோக்கி: என்பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். மாற்கு 1:17

**சத்தியம்:** இயேசு சொன்னார்: ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கிப் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்.

**அறிக்கை:** கர்த்தராகிய இயேசு என்னைப் பிறருக்கு ஆசீர்வாதமாக இருக்க அழைத்திருக்கிறார்

## பாடக்குறிப்புகள்

- **தேவன் உன்னை அழைக்கிறார்** - *1 சாமு. 3:10-14, 1 கொரி. 2:9*
- **மிகப்பெரிய கட்டளை** - *மத். 28:18-20*
- **அறுவடை மிகுதி** - *மத். 9:36,37*
- **மிகுந்த மகிழ்ச்சியான பணி**
- **மற்றவர்கள் இயேசுவை அறிந்து கொள்ள உதவுதல்** - *எபி.2:4-10, அப்.4:12*

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *மனிதரைப் பிடித்தல் என்றால் என்ன?*
- *இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல் எவ்வாறு மகிழ்ச்சியான பணியாகக் கருதப்படுகிறது?*

**வேதப்பகுதி**
*மாற்கு 1:14-20*

## உன்னுடைய அழைப்பு

சாமுவேல் இளம் வயதில் தேவன் அழைப்பதைக் கேட்டு உடனே கீழ்ப்படிந்தார். ஆகையால் தேவன் அவரை வல்லமையாய்ப் பயன்படுத்த முடிந்தது. இன்றும் இளம் வயதினரைக் கர்த்தர் தம்முடைய பணிக்கென்று அழைக்கிறார். அந்த அழைப்புக்கு அர்ப்பணிக்கும்போது நம் வாழ்க்கை ஒரு பயனுள்ள வாழ்க்கையாக மாறும். தேவன் உனக்கும் கூட ஒரு நோக்கத்தையும், அழைப்பையும் வைத்திருக்கிறார். உன்னுடைய அழைப்பு என்னவென்று நீ நினைக்கிறாய்? அதை கிறிஸ்துவைப் பகிர்ந்து கொள்வதற்கென்று எவ்வாறு பயன்படுத்தலாம்? அதைக்குறித்து எழுதவோ அல்லது வரையவோ செய்.



**செயல்**

**இயேசுவைப் பற்றி பிறரோடு பகிர்ந்து கொள்வதே நம்முடைய அழைப்பு. நீ நேசிக்கும் ஒருவருக்குச் சிலுவையில் இயேசு செய்த தியாகச் செயலை இன்று சொல்.**

**சிந்திக்க:**

*உன் வாழ்வின் சந்தோஷம் எவ்வாறு பிறரைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தும்?*

______________________________

______________________________

**ஜெபம்:**

*இயேசுவின் நற்செய்தியைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளத் தேவன் உனக்கு உதவுமாறு ஜெபம் ஒன்றை எழுது.*

______________________________

______________________________